வழங்கப்பட்ட இடங்களை மீண்டும் அதே தமிழ்ச் சொற்களாலே வழங்கப்பட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : வேதாரணியம், மாயூரம் போன்ற பகுதிகளிலிருந்து வரப்பட்ட அந்த கோரிக்கை பரிசிலிக்கப்பட்டு, இப்பொழுது பெயர் மாற்றம் செய்ய வேண்டிய அவசியம் இல்லையென்று அரசு முடிவு செய்திருக்கிறது.

பயிரிடும் உள் குத்தகைதாரர்கள்

*555 வினு—**திரு. ச. சங்குமுத்து தேவர் :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உள் குத்தகைதாரர் தான் பயிரிடும் சம்சாரிதான் என்று ஆக்ட் 9/69-ல் சீர்திருத்த சட்டம் பிறந்து இருந்த போதிலும் அமலுக்கு வந்ததாக அறிவிப்பு செய்யப்படவில்லையென்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) வினவுக்கு இடமில்லை.

திரு ச. சங்குமுத்து தேவர் : தலைவர் அவர்களே, இந்த உள் குத்தகைதாரர் தான் பயிரிடும் சம்சாரி என்பதைப்பற்றி, குத்தகை உறவுப் பதிவு தனி தாசில்தார் நியமிக்கப்பட்டு, அவரிடம் இவைகள் எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இப்பொழுது, 'பார்ம் 5' என்ற பாரத்தில் பூர்த்திசெய்து கொடுக்கப்பட்டவை தாசில்தார் அலுவலகத்தில் தேங்கிக் கிடக்கின்றன. அது சீக்கிரத்தில் கவனிக்கப்படாமல் இருப்பதால் இது மாதிரி பதிவு செய்யப்பட வேண்டிய குத்தகை சம்சாரி யார் என்று விவசாயிகள் அறிய முடியாமல் அவதிப்படுகிறார்கள். ஆகவே, குறிப்பிட்ட காலத்தில், விரைவில் விசாரணை செய்து, அவற்றை அளிக்க நடவடிக்கை எடுக்க அரசு உத்தரவு பிறப்பிக்குமா என அறிய விரும்புகிறேன்.

1973 டிசம்பர் 1]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மூலக் கேள்வி உள் குத்தகைதாரர்களுக்கும் பாதுகாப்பு உண்டா என்பது பற்றிய தாகும். உள் குத்தகைதாரருக்கும் பாதுகாப்பு கொடுக்கப்படுகிறது. அரசாங்க சட்டங்களிலே திருத்தங்கள் செய்யப்பட்டு, 30—7—1969 நாளிட்ட தமிழ் நாடு அரசிதழில் இந்த உள் குத்தகைதாரர் களுக்குப் பாதுகாப்பு உண்டு என்ற சட்டத்தை அரசாங்கம் பிரகடனப்படுத்தியது. எனவே, அந்தத் தேதியிலிருந்து அமலுக்கு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிற கேள்வி, தனிப்பட்ட பிரச்னையாகும். தனியாகக் கேள்வி போட்டால், அதற்கான பதிலைத் தருகிறேன்.

புலவர் சி. பழனிச்சாமி : தலைவர் அவர்களே, பல ஆண்டுகளாக பயிரிட்டுக் கொண்டு வருகின்ற குத்தகைதாரர்களை இன்றைக்கு நில உரிமையாளர்கள் வெளியேற்ற முயற்சி செய்கிறார்கள். ஆகவே, கெஸட் நோட்டிஃபிகேஷனில், யார் யார் குத்தகைதாரர்கள் என்று பதிவு செய்யப்பட்டுள்ளதோ, அவர்களுக்கு, அந்தப் பகுதியிலுள்ள டி.எஸ்.பி. போன்ற காவல் துறை அதிகாரிகளே முழுப் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென அரசு ஆணையிடுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கெஸட் நோட்டிஃபிகேஷனில் பதிவு பெற்றுள்ளவர்கள்தான் சட்டப் பிரகாரம் உரிமையாளர்கள். அவர்களுக்குப் பாதுகாப்பற்ற நிலைமை இருக்குமானால், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் போலீஸ் அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்தினால், நிச்சயமாக நடவடிக்கை எடுத்துக்கொள்வார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

இந்த மன்றத்திலே பல உரிமைப் பிரச்சினைகள் எழுப்பப்பட் டிருக்கின்றன. அதற்கான தீர்ப்புகளை பின்னால் அறிவிக்கின்றேன் என்று சொல்லியிருந்தேன். அவற்றை இன்று தெரிவிக்கிறேன்.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) இடப்பட்டிருந் தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS